இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 315 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 12 – வெள்ளிக்கிழமை 26 ஜூன் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 315 : Thiruvalluvar Year - 2057 - Aani 12 - Friday 26 June 2026 - Madurai 8 Pages ₹ 5.00



திருவாரூர் – காட்டூரில் அமைந்துள்ள "கலைஞர் கோட்டம்" அஞ்சுகத்தம்மையார் அரங்கில், நேற்று காலை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக விவசாயத் தொழிலாளர் அணித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உ.மதிவாணனின் புதல்வர் மதி.கதிரவன் – த.மௌனிகா ஆகியோரின் திருமணத்தைத் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றினார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ., கோவி.செழியன் எம்.எல்.ஏ., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா உள்பட பலரும் இம்மணவிழாவில் கலந்துகொண்டார்கள்.

## என்னை வேறெங்கேயும் தேடவேண்டாம்!

# மக்கள் மனதில் நிலையாக இருக்கிறேன்!

### திருவாரூரில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன் இல்லத் திருமண விழாவில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

**திருவாரூர், ஜூன் 26-**

**திருவாரூரில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன் இல்லத் திருமண விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது "என்னை வேறெங்கேயும் தேடவேண்டாம்; மக்கள் மனதில் நிலையாக இருக்கிறேன்" என்று கூறினார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின அவர்கள் நேற்று (25.06.2026) திருவாரூர் - காட்டூரில் அமைந்துள்ள கலைஞர் கோட்டத்தில் நடைபெற்ற கழகத்தின் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உ. மதிவாணன் அவர்களின் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்கள் கதிரவன் - மௌனிகா ஆகியோரை வாழ்த்தினார்.

அதுபோது அவர் ஆற்றிய உரை வருமாறு:-

கழகத்தின் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் நம்முடைய அருமைச் சகோதரர் மதிவாணன் அவர்களின் இல்லத்தில், அவருடைய இளைய மகன் கதிரவன் - மௌனிகா அவர்களுக்கும் திருமண விழாவை நடத்தி வைத்து, அதே நேரத்தில் மணக்கோலம் கொண்டிருக்கும் மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். அதற்காக நான் அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவில் பங்கேற்கிறபோது, நான் பல்வேறு வகைகளில் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன். ஒன்று, மதிவாணன் இல்லத்தில் நடைபெறும் மணவிழா நிகழ்ச்சி; இரண்டாவது மகிழ்ச்சி என்ன என்றால், கலைஞர் வளர்ந்த மண்ணில் இந்த திருவாரூர் மண்ணில் நடைபெறும் மணவிழா நிகழ்ச்சி.

**கழகத்தில் படிப்படியாக வளர்ந்து வந்திருப்பவர் மதிவாணன்!**



எனவே அப்படிப்பட்ட திருவாரூரில், அதுவும் தலைவர் பெயரால் அமைந்திருக்கும் இந்த கலைஞர் கோட்டத்தில், அதையும் தாண்டி சொல்ல வேண்டும் என்றால், இந்த அரங்கம் கலைஞரை ஈன்றெடுத்த அவருடைய அன்னை என்னுடைய பாட்டி அஞ்சுகம் அம்மையார் பெயரில் அமைந்திருக்கும் இந்த அஞ்சுகம் அரங்கத்தில் நடைபெறும் மணவிழா. எனவே நான் பல்வேறு கோணங்களில் இந்த விழாவில் பங்கேற்கிறபோது மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறேன்.

நான் ஏற்கனவே மதிவாணன் குடும்பத்தில் அவருடைய சகோதரர் காமராஜ் அவர்களின் மணவிழாவையும் நான்தான் நடத்தி வைத்தேன்.

நான் எண்ணிப் பார்க்கிறேன்… ஏறக்குறைய 40 ஆண்டு காலமாக அவர் இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு, சிறப்பாக இந்த இயக்கத்திற்கு துணை நின்று கொண்டிருக்கிறார்.

முதன் முதலில் 1986இல் கிளைக் கழகத்தின் செயலாளராக இருந்து, மாவட்டக் கழகத்தின் பிரதிநிதியாக 1996இல் பொறுப்பேற்று, அதைத்தொடர்ந்து மாவட்டக் கழகத்தின் துணைச் செயலாளராகவும் கடமையை நிறைவேற்றி, அதற்குப் பின்னால் ஆதிதிராவிடர் நலக்குழுவின் துணைச் செயலாளராகவும் பொறுப்பேற்று, விவசாயத் தொழிலாளர் அணியின் செயலாளராகவும் பொறுப்பேற்று, அந்த அணியின் தலைவராகவும் பொறுப்பேற்று இன்றைக்கு செயலாற்றிக் கொண்டிருக்கிறார். இப்படி படிப்படியாக வளர்ந்து வந்திருப்பவர் மதிவாணன் அவர்கள்.

கட்சிப் பணிகளில் மட்டுமல்ல, மக்கள் பணியை எடுத்துக் கொண்டாலும், 1986இல் ஊராட்சி மன்றத் தலைவராக, அதைத் தொடர்ந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக, 1996இல் ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராகப் பணியாற்றியிருக்கிறார். அதற்குப் பிறகு, 2006இல் ஐந்தாவது முறையாக

> **"அப்பாவை அங்கே தேடாதீர்கள். மக்கள் மனதில் பதிந்திருக்கிறான். அது போதும். நீங்கள் தேடும் இடத்தில் நான் இருக்க மாட்டேன். மக்கள் தேடும் இடத்தில் நிச்சயமாக நான் முதல் ஆளாக நிற்பேன். நான் சட்டமன்றத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இன்றைக்கு நான் மக்கள் மன்றத்தில் இருக்கிறேன்."**

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்தில், அவருடைய அமைச்சரவையில் பால்வளத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, அந்தப் பணியையும்

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

# எல்லா வினைக்கும் எதிர்வினை உண்டுதானே?

**கல்லா பெட்டி கட்சிகள், அல்லுசில்லுகள் என்று அரசியல் கட்சிகளை கொச்சைப் படுத்திப்பேசும் முதலமைச்சர் விஜயை இன்னமும் காக்கத் துடிக்கலாமா? எல்லா வினைக்கும் எதிர்வினை உண்டுதானே?**

தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்புக்கும் மரியாதைக்கும் நெறிமுறைகளுக்கும் கண்ணியத்துக்கும் இழுக்கு ஏற்படுத்தும் வகையில் முதலமைச்சர் விஜய் ஆற்றிய உரையை ஒப்புக்கு கண்டித்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் வீரபாண்டியன் ஆகியோர் அத்துடன் சேர்த்து, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதியும் பேசியது தவறு என்று சொல்லி இருக்கிறார்கள்.

சபையின் கண்ணியத்தைக் குலைக்கும் வகையில் முதலமைச்சர் பேசியதையும் அதற்கு எதிர்வினையாக சபைக்கு வெளியில் செய்த விமர்சனத்தையும் ஒன்றாகப் பார்ப்பது சரியா?

**எல்லா வினைக்கும் எதிர்வினை உண்டுதானே? கல்லாப்பெட்டி கட்சிகள், அல்லுசில்லுகள் என்று அரசியல் கட்சிகளைக் கொச்சையாகப் பேசும் முதலமைச்சரைக் காக்க இன்னமும் துடிப்பது ஏனோ?**